தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்.149/மா/2022**

**நாள் : 09.11.2022**

திரு. வ. ஆண்ட்ரூஸ் ஞானராஜ்,
திருச்சிராப்பள்ளி – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
ஸ்ரீரங்கம் கோட்டம்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
திருச்சிராப்பள்ளி – எதிர்மனுதாரர்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், Crawford, விறகு பேட்டை தெரு, எண்.67/3–ல் வசிக்கும் திரு.வ.ஆண்ட்ரூஸ் ஞானராஜ் என்பவரின் 01.09.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 07.09.2022-ல் பெறப்பட்டு 149மா/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், Crawford, விறகு பேட்டை தெரு, எண்.67/3–ல் வசிக்கும் திரு. வ.ஆன்ட்ரூஸ் ஞானராஜ் என்பவர் தனது முறையீட்டு மனுவில், கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:

" I respectfully submit that the property comprised in Town Survey Nos. 4,17,25.26-2, 29-2. 34 and 35 are classified as Canal situated at Blcok No.35, Survey Ward: N, Trichy City Corporation, Srirangam Division, Trichy. I came to know that the above said Canal which is a water source has been completely encroached by Kal Sirpa Kadai in an extent of 23.00

meters in Survey No. 17 towards south west direction by blocking the water flow of the canal. Further towards the southern side 1.0 meters and towards eastern-western side of an extent of 21.0 metres were encroached by way laying stair cases. In fact as per the revenue records the entire area is classified as a canal. All the above mentioned survey properties are completely classified as a canal. Further in sofar as survey numbers 25, 26-2, four shops were constructed by Muthavalli of Varaji Piran Pallivasal on their own whims and fancies.

I further submit that the water flow from the main Uyyakkondan river passes through 8 branches and water flows through the said 8 branches including the present above said canal. In view of the above said encroachments the above entire water body i.e. canal has been turned as house plots and houses are constructed by all unauthorized persons.

In view of the said encroachments made in the water body, only drainage water is only flows into the canal causing severe hardship and hazards. It is pertinent to mention that whenever any water body is encroached, the revenue administration is duty bound to survey and take measurements and identify the canal area and to remove all illegal encroachments made in the water body. This fact has been time and again considered by The Hon'ble Madras High Court and insisted for removal of all such illegal encroachments on the water bodies by the revenue authorities

I further submit that I have made a complaint before the Trichirappalli City Municipal Corporation explaining all the above facts and in response to the same, the Asst. Commissioner, Srirangam division has issued a letter to me dated 24.11.2020 stating that they have taken necessary action to conduct the survey through the Corporation officials and would remove the illegal encroachments.

I further submit that the Assistant Commissioner have admitted through their replies on various dates stating that there are illegal encroachments made in the water body and promised to take necessary action to remove the said illegal encroachments. But till date they have failed to take any practical action except through way of communications sent to me. This act on the part of the officials is highly illegal and arbitrary. They are being statutory authorities have to protect the water bodies from any illegal encroachment.

Therefore I humbly request you to issue an order for directing the Corporation Officials herein to remove the encroachments made in the water body comprised in T.S.Nos. 4,17,25,26-2, 29-2, 34 and 35 situated at Block No.35, Survey Ward N situated at Srirangam Division, Trichy City Corporation " என தெரிவித்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்பக்கோரி ஆணையர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, உதவி ஆணையர், ஸ்ரீரங்கம் கோட்டம், ஆகியோருக்கு இம்முறைமன்ற நடுவ 21.09.2022 நாளிட்ட அறிவிப்பு அனுப்பப்பட்டது.

3) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவ 07.10.2022 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் 18.10.2022 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைக்கப்பட்டனர்.

4) மனுதாரர் தனது தந்தையின் உடல் நலம் பாதிக்கப்பட்டுள்ளதை தெரிவித்து 18.10.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகவில்லை.

5) 18.10.2022 அன்றைய நேரடி விசாரணையில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் மண்டலம்–1 ஸ்ரீரங்கம் உதவி ஆணையர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

" மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள வார்டு எண் 21 டவுன் சர்வே எண் N பிளாக் 35, நகரளவு எண் 4,17,25,26–2, 29–2 மற்றும் 35 ஆகியவற்றின் மீது மனுதாரரால் வழக்கு (வழக்கு எண். W.P.(MD) 10982/2022) தொடரப்பட்டது. அதில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியை பிரதிவாதியாக சேர்க்கப்படவில்லை. பொதுப்பணித்துறை மற்றும் வருவாய்துறை ஆகிய துறைகளை மட்டுமே பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளனர். அவ்வழக்கின் மீதான 08.06.2022 நாளிட்ட தீர்ப்பில், பொதுப்பணித்துறையால் மேற்கண்ட இடங்களை ஆய்வுசெய்து, ஆக்கிரமிப்பு இருக்குமேயானால் அதனை சட்டப்படி அகற்றிட நடவடிக்கை எடுக்குமாறு பொதுப்பணித்துறைக்கு ஆணையிடப்பட்டுள்ளது. பொதுப்பணித்துறையுடன் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அலுவலர்கள் சேர்ந்து, மேற்கண்ட இடங்களை கள ஆய்வுசெய்து அங்குள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிட தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் மேற்கண்ட சர்வே எண்களில் 4 மற்றும் 34 ஆகிய நகரளவு எண்களின் வகைப்பாடு அரசு புறம்போக்கு எனவும், குறிப்பு என்கின்ற கலத்தில்(column) சாக்கடை என பதிவு உள்ளதால், அதன்மீது மாநகராட்சியின் சட்டவிதிகளின்படி ஆக்கிரமிப்புகளை அகற்ற கண்காணிப்புக்குழு அமைக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு இன்னும் 3 மாத காலத்திற்குள் ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும் என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் என்னால் இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனது 14.10.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது வாக்குமூலமாக பதிவு செய்து கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) திருச்சிராப்பள்ளி, ஸ்ரீரங்கம் உதவி ஆணையர் தனது 14.10.2022 நாளிட்ட அறிக்கையில் கீழ்ககண்டவாறு தெரிவித்துள்ளார்:

" மாண்பமை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு எண்.W.P.(MD) No. 10982/2022–ல் வார்டு எண் 21, டவுன் சர்வே வார்டு எண் N பிளாக் எண்.35 நகரளவு எண் 4,17,25,26–2, 29–2, 34 மற்றும் 35 என்ற இடத்தில் கல் சிற்பக்கடை மற்றும் முத்தவல்லி வராஜிபிரான் பள்ளிவாசல் ஆகிய நிர்வாகங்கள் நீர்நிலை வாய்க்காலினை ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக ஆக்கிரமிப்புகளை அகற்றக்கோரி மாண்பமை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் திரு.வ.ஆண்ட்ரூஸ் ஞானராஜ் என்பவரால் வழக்கு தொடரப்பட்டது. மேற்படி வழக்கில் முதல் பிரதிவாதியாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், திருச்சிராப்பள்ளி, 2–வது பிரதிவாதியாக செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை(ஆற்றுநீர் பாதுகாப்பு கோட்டம்) மற்றும் 3–வது பிரதிவாதியாக வட்டாட்சியர், திருச்சிராப்பள்ளி கிழக்கு வட்டாட்சியர் அலுவலகம் ஆகியோரை சேர்த்து வழக்கு தொடர்ந்துள்ளார். மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையால் 08.06.2022 அன்று தீர்ப்புரை வழங்கப்பட்டுள்ளது. இவ்வழக்கில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி நிர்வாகத்தினரை

பிரதிவாதியாக சேர்க்கப்படவில்லை என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது. இருப்பினும் இவ்வழக்கு தொடர்பாக திருச்சிராப்பள்ளி மாநகராட்சி நகர சார் ஆய்வரிடம் மேற்கூறிய இடங்கள் தொடர்பாக அளவீடு செய்து அறிக்கை கோரப்பட்டுள்ளது.

இந்நேர்வில் நகரசார் ஆய்வர் மேற்கண்ட மனுதாரர் புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள நகரளவு எண்களின் ஆக்கிரமிப்பு குறித்து மேற்கண்ட இடம் நகரளவு கணக்குகளை பரிசீலனை செய்தும், நில அளவை செய்தும், அதன் அறிக்கை 07.10.2022 அன்று சமர்ப்பித்துள்ளார். அதன் அடிப்படையில் நகரளவு எண், வகைப்பாடு அதில் உள்ள ஆக்கிரமிப்பினை கீழ்க்கண்டவாறு தெரிவித்துக்கொள்கிறேன்.

| வ. எண். | நகரளவு எண் | வகைப்பாடு | பரப்பு (ச.மீ) | குறிப்பு அடங்கல் பதிவேட்டில் கலம் 19ன் படி |
|---|---|---|---|---|
| 1. | 4 | சர்க்கார் புறம்போக்கு | 0.0181.5 | சாக்கடை |
| 2. | 17 | சர்க்கார் புறம்போக்கு | 0.2066.0 | வாய்க்கால் |
| 3. | 25 | சர்க்கார் புறம்போக்கு | 0.0026.0 | வாய்க்கால் |
| 4. | 26/2 | சர்க்கார் புறம்போக்கு | 0.0295.0 | வாய்க்கால் |
| 5. | 29/2 | சர்க்கார் புறம்போக்கு | 0.0022.0 | வாய்க்கால் |
| 6. | 34 | சர்க்கார் புறம்போக்கு | 0.0319.0 | சாக்கடை |
| 7. | 35 | சர்க்கார் புறம்போக்கு | 0.1083.0 | வாய்க்கால் |

இதில் நகரளவு எண்.17,25,26/2, 29/2, மற்றும் 35 ஆகிய நகரளவு எண்கள் வகைப்பாடு சர்க்கார் புறம்போக்கு எனவும், குறிப்பு கலத்தில் வாய்க்கால் எனவும் உள்ளதாலும், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற வழக்கில் 2–வது பிரதிநிதியாக பொதுப்பணித்துறை, நீர்வள ஆதார அமைப்பு, செயற்பொறியாளர் வழக்கில் சேர்க்கப்பட்டு மனுதாரரால் சமர்ப்பிக்கப்படும் மனுவை பரிசீலிக்க உத்தரவிடப்பட்டுள்ளதால், நீர்வள ஆதார அமைப்பு மூலம் மனுதாரர் ஆக்கிரமிப்பு அகற்ற தனியே மனு செய்து நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்பதை இம்முறைமன்றத்தில் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.

நகரளவு எண்.4, மற்றும் 34 ஆகிய இரு புலங்கள் வகைப்பாடு சர்க்கார் புறம்போக்கு எனவும், குறிப்பு கலத்தில் சாக்கடை என்பதால் அதன் தொடர்பாக ஆவணங்கள் பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு தெரிவித்துக்கொள்கிறேன்.

i)நகரளவு எண்.4

மேற்கண்ட நகரளவு எண்.4, வகைப்பாடு அரசு புறம்போக்கு அதன் பரப்பு 0.0181.5 சதுர மீட்டர் குறிப்பு கலத்தில் சாக்கடை என நகரளவு அடங்கல் பதிவேட்டில் பதிவு உள்ளது. மேற்கண்ட நகரளவு எண் புலப்படத்தில் மட்டுமே சாக்கடை என குறியீடு தென்வடலாக உள்ளது. ஆனால் பூமியில் சாக்கடை வாய்க்கால் சென்றதற்கான ஆதாரம் ஏதுமில்லை. நகரளவு வரைபடத்தின் அடிப்படையில் அளவீடு செய்யப்பட்டதில் கல்லூரியின் மையப்பகுதியில் அமைந்துள்ள அலுவலகக்கட்டிடம் (1+2) கட்டிடம் அடியில்

தெற்கு நோக்கி சென்று இடையே கார்டன், கட்டிடம், பெண்கள் கழிவறை, வடப்புறம் கல்லூரி வளாக (கிழமேல்) முடிவில் முடிவடைகிறது. முடிவிலும் சாக்கடை சென்றதற்கான ஆதாரம் ஏதுமில்லை எனவும், மேற்கண்ட கட்டிடம் 100 ஆண்டுகளுக்கு மேலான கட்டிடமாக உள்ளது எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மேற்கண்ட நகரளவு எண்.4ல் உள்ள ஆக்கிரமிப்பு அகற்றுவது குறித்து திரு.T.விக்னேஷ்வரன் என்பவர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் W.P.(MD) No. 11999/2022 வழக்கு தொடர்ந்து 01.07.2022 தீர்ப்புரை வழங்கப்பட்டது. மேற்கண்ட இடத்தில் சாக்கடை ஏதும் செல்லவில்லை எனவும், மேற்கண்ட புலத்தில் வகைப்பாடு அரசு புறம்போக்கு என பதிவு செய்யப்பட்டு இருப்பின் அந்த இடத்தின் 100 ஆண்டுகளுக்கு மேலாக கல்லூரி கட்டடம் கட்டப்பட்டு கல்வி நிலையம் தொடர்ந்து நடைபெற்று வருவதால் பிரதிவாதியான கல்லூரி நிர்வாகம் அரசு/வருவாய் துறை அணுகி அந்த சிறிய பகுதி இடத்திற்கு நில அடமானம்/பட்டா கோரி விண்ணப்பம் செய்ய மாண்பமை நீதிமன்ற உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>ii)நகரளவு எண்.34</u>

நகரளவு எண்.34, வகைப்பாடு அரசு புறம்போக்கு அதன் பரப்பு 0.0319.0 சதுர மீட்டர் இடம் கல்லூரியின் மேல்புறம் முடிவில் தென்வடலாக 560 அடி நீளத்திற்கும் 6 அடி அகலத்திற்கும் புலப்படத்தில் உள்ளது. பூமியில் சாக்கடை ஏதும் இல்லை எனவும், அதில் தென்வடலாக சுற்றுச்சுவர்(compound) எழுப்பப்பட்டுள்ளது. மேற்படி சுற்றுச்சுவர் தென்மேற்கு மூலையில் ஆரம்பித்து சுற்றுச்சுவரையொட்டி பெண்கள் கழிவறை, மாற்றுத்திறனாளி சாய்வுதளத்தூண் மற்றும் அரங்கத்தின் பின்பகுதி சிறிய அறை ஆகிய கட்டிடம் (6 அடி) அளவில் கட்டடம் ஆக்கிரமிப்பு தோராயமாக 150 x 6 அடி பரப்பு ஆக்கிரமிப்பு உள்ளது. மீதமுள்ள 410 சதுர அடி தென்வடலாக சுற்றுச்சுவர் எழுப்பப்பட்டு கல்லூரி வளாக சுற்றுச்சுவர் மற்றும் காலியிடம் உள்ளது. மேற்கண்ட நகரளவு எண்.34–ல் இடத்தில் ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றுவதற்கு அரசு வழக்கறிஞரிடம் இவ்வலுவலக கடிதம் வாயிலாக கருத்துரு கோரப்பட்டுள்ளது. சட்டக்கருத்துரு அடிப்படையில் மாநகராட்சி சட்ட விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

7) முறையீட்டு மனுதாரரின் மனு, திருச்சிராப்பள்ளி ஸ்ரீரங்கம் உதவி ஆணையரின் வாக்குமூலம் மற்றும் அறிக்கை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டுள்ளன:

மனுதாரர் வார்டு எண் 21 டவுன் சர்வே வார்டு எண் N பிளாக் எண் 35, நகரளவு 4,17,25, 26/2, 29/2, 34 மற்றும் 35 ஆகியவை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டு அதனை அகற்ற தக்க நடவடிக்கை எடுக்க புகார் மனு அளித்துள்ளார்.

மனுதாரர் இது தொடர்பாக வழக்கு எண். W.P. (M.D.) No.10982/2022 தொடர்ந்து அந்த வழக்கின் தீர்ப்பு 08.06.2022ல் வழங்கப்பட்டுள்ளது. அதில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியை பிரதிவாதியாக சேர்க்கவில்லை. பொதுப்பணித்துறை மற்றும் வருவாய்துறை ஆகிய துறைகள் மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளனர். சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை தனது 01.07.2022 நாளிட்ட தீர்ப்பில் கீழ்க்கண்டவாறு ஆணையிட்டுள்ளது.

" The second respondent is directed to consider the petitioner's representation, that may be filed independently by the petitioner within a period of two weeks from the date of receipt of a copy of this order, and pass appropriate orders or take appropriate action under the provisions of the Act strictly following the procedure."

It is made clear that every encroachers shall be put on notice before conducting survey and demarcating the water body.

The second respondent is directed to complete the entire exercise within a period of sixteen weeks from the date of receipt of representation from the petitioner

சர்வே எண்கள் 4 மற்றும் 34 ஆகிய நகரளவு எண்களின் வகைப்பாடு அரசு புறம்போக்கு எனவும் குறிப்பு என்கிற கலத்தில் (column) சாக்கடை என பதிவு உள்ளது. மேற்கண்ட சர்வே எண்கள் 4 & 34 சாக்கடை என வகைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் மாநகராட்சியின் சட்ட விதிகளுக்குட்பட்டு சாக்கடைகளை பராமரிக்கும் மாநகராட்சியே ஆக்கிரமிப்புகளை அகற்ற கண்காணிப்புக்குழு அமைக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு இன்னும் 3 மாத காலத்திற்குள் ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும் என்பதையும் மேலும் மற்ற வாய்க்கால் வகைப்பாடுகளை திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அலுவலர்களுடன் சேர்ந்து மேற்கண்ட இடங்களை கள ஆய்வு செய்து ஆக்கிரமிப்புகளை அகற்றிட தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனையும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவி ஆணையரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

நகர சார் ஆய்வர் அறிக்கையின்படி நகரளவு எண்.17,25,26/2, 29/2 மற்றும் 35 ஆகிய நகரளவு எண்கள் வகைப்பாடு சர்க்கார் புறம்போக்கு எனவும், குறிப்பு கலத்தில் வாய்க்கால் எனவும் உள்ளதாலும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கில் 2வது பிரதிவாதியாக பொதுப்பணித்துறை, செயற்பொறியாளர், (நீர்வள ஆதார அமைப்பு) சேர்க்கப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளதால், நீர்வள ஆதார அமைப்பு மூலம் மனுதாரர் ஆக்கிரமிப்பு அகற்ற தனியே மனு செய்து நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்பதை உதவி ஆணையரின் அறிக்கை வாயிலாக அறிய முடிகிறது.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவி ஆணையரின் 14.10.2022 நாளிட்ட அறிக்கையின் மூலம் கீழ்க்கண்ட விவரங்கள் தெரிய வருகின்றன. மேற்கண்ட நகரளவு எண்.4, வகைப்பாடு அரசு புறம்போக்கு அதன் பரப்பு 0.0181.5 சதுர மீட்டர் குறிப்பு கலத்தில் சாக்கடை என நகரளவு அடங்கல் பதிவேட்டில் பதிவு உள்ளது. மேற்கண்ட நகரளவு எண் புலப்படத்தில் மட்டுமே சாக்கடை என குறியீடு தென்வடலாக உள்ளது. ஆனால் பூமியில் சாக்கடை வாய்க்கால் சென்றதற்கான ஆதாரம் ஏதுமில்லை. நகரளவு வரைபடத்தின் அடிப்படையில் அளவீடு செய்யப்பட்டதில் திருச்சிராப்பள்ளி ஹோலிகிராஸ் பெண்கள் கல்லூரியின் மையப்பகுதியில் அமைந்துள்ள அலுவலகக்கட்டிடம் (1 + 2 ) கட்டிடம் அடியில் தெற்கு நோக்கி சென்று இடையே கார்டன், கட்டிடம், பெண்கள் கழிவறை, வடப்புறம் கல்லூரி வளாக (கிழமேல்) முடிவில் முடிவடைகிறது. முடிவிலும் சாக்கடை சென்றதற்கான ஆதாரம் ஏதுமில்லை. மேற்கண்ட கட்டிடம் 100 ஆண்டுகளுக்கு மேலான கட்டிடமாக உள்ளது. மேற்கண்ட நகரளவு எண்.4ல் உள்ள ஆக்கிரமிப்பு அகற்றுவது குறித்து திரு. T. விக்னேஷ்வரன் என்பவர் மாண்பமை சென்னை

உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் W.P.( MD) No.11999/2022 வழக்கு தொடர்ந்து 01.07.2022 தீர்ப்புரை வழங்கப்பட்டது. மேற்கண்ட இடத்தில் சாக்கடை ஏதும் செல்லவில்லை எனவும், மேற்கண்ட புலத்தில் வகைப்பாடு அரசு புறம்போக்கு என பதிவு செய்யப்பட்டு இருப்பின் அந்த இடத்தின் 100 ஆண்டுகளுக்கு மேலாக கல்லூரி கட்டடம் கட்டப்பட்டு கல்வி நிலையம் தொடர்ந்து நடைபெற்று வருவதால் பிரதிவாதியான கல்லூரி நிர்வாகம் அரசு/வருவாய் துறை அணுகி தங்கள் அலுவலகத்தில் இருக்கும் அந்த சிறிய பகுதி இடத்திற்கு நில அடமானம்/பட்டா கோரி விண்ணப்பம் செய்ய மாண்பமை நீதிமன்ற உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நகரளவு எண்.34, வகைப்பாடு அரசு புறம்போக்கு அதன் பரப்பு 0.0319.0 சதுர மீட்டர் இடம் கல்லூரியின் மேல்புறம் முடிவில் தென்வடலாக 560 அடி நீளத்திற்கும் 6 அடி அகலத்திற்கும் புலப்படத்தில் உள்ளது. பூமியில் சாக்கடை ஏதும் இல்லை எனவும், அதில் தென்வடலாக சுற்றுச்சுவர்(compound) எழுப்பப்பட்டுள்ளது. மேற்படி சுற்றுச்சுவர் தென்மேற்கு மூலையில் ஆரம்பித்து சுற்றுச்சுவரையொட்டி பெண்கள் கழிவறை, மாற்றுத்திறனாளி சாய்வுதளத்தூண் மற்றும் அரங்கத்தின் பின்பகுதி சிறிய அறை ஆகிய கட்டிடம் (6 அடி) அளவில் கட்டடம் ஆக்கிரமிப்பு தோராயமாக 150 x 6 அடி பரப்பு ஆக்கிரமிப்பு உள்ளது. மீதமுள்ள 410 சதுர அடி தென்வடலாக சுற்றுச்சுவர் எழுப்பப்பட்டு கல்லூரி வளாக சுற்றுச்சுவர் மற்றும் காலியிடம் உள்ளது. மேற்கண்ட நகரளவு எண்.34–ல் இடத்தில் ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றுவதற்கு அரசு வழக்கறிஞரிடம் கடிதம் வாயிலாக கருத்துரு கோரப்பட்டுள்ளது எனவும் சட்டக்கருத்துரு அடிப்படையில் மாநகராட்சி சட்ட விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் உதவி ஆணையரின் அறிக்கை வாயிலாக அறியமுடிகிறது.

மனுதாரர் தமிழ்நாடு முதலமைச்சர் தனிப்பிரிவுக்கு இப்பொருள் தொடர்பாக மனு அனுப்பியுள்ளதற்கு, இது தொடர்பாக நகர சார் அளவையருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டு தொடர்ச்சியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது. பதில் ஒன்றை மட்டுமே அளித்து விட்டு தொடர் நடவடிக்கையை எடுக்காமல் இருந்துள்ளது மாநகராட்சி அலுவலர்களின் பொறுப்பற்ற செயலை காண்பிக்கிறது. மனுதாரர் குறிப்பிட்டுள்ள கல் சிற்பக்கடை மற்றும் முத்தவல்லி வராஜிபிரான் பள்ளிவாசல் நீர்நிலை வாய்க்கால் ஆக்கிரமிப்பு தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை வழங்கியுள்ள தீர்ப்பின் அடிப்படையிலும், இந்த ஆக்கிரமிப்பு செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, நீர்வள ஆதார அமைப்பு துறை, தொடர்பானதாலும் இது தொடர்பாக மாண்பமை உயர்நீதிமன்ற உத்தரவுப்படி அவர்களுக்கு தனியே மனு செய்து உரிய நிவாரணம் தேடிக்கொள்ளுமாறு மனுதாரர் அறிவுறுத்தப்படுகிறார்.

இந்நேர்வில் உரிய முறையில் களப்பணி மேற்கொண்டு இருந்தால் ஆரம்ப நிலையிலேயே ஆக்கிரமிப்புக்களை அகற்றிட உரிய நடவடிக்கை எடுத்திருக்க முடியும். ஆதலால் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியை சேர்ந்த அலுவலர்கள் உரிய முறையில் களப்பணி ஆற்றிட தக்க நடவடிக்கை எடுத்திடுமாறு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. இதனை தொடர்ந்து கண்காணித்து அங்கு எவ்வித ஆக்கிரமிப்பும் நிகழாவண்ணம் நடவடிக்கை எடுத்திடவும் அறிவுறுத்தப்படுகிறது.

நகரளவு எண் 4 – ஐ பொருத்தவரை மாண்பமை உயர்நீதிமன்ற உத்தரவுப்படி மேல் நடவடிக்கை எடுக்க திருச்சிராப்பள்ளி ஹோலிகிராஸ் பெண்கள் கல்லூரி நிர்வாகம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதால் நகரளவு எண் 34 வகைப்பாடு அரசு புறம்போக்கு இடம் தொடர்பாக திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்ட விதிகளின்படி ஆக்கிரமிப்புகளைஅகற்ற கண்காணிப்புக்குழு

அமைக்கப்பட்டு 3 மாதங்களுக்குள் ஆக்கிரமிப்புக்களை அகற்ற தக்க நடவடிக்கை எடுக்க திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2022-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 09 -ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. வ. ஆண்ட்ரூஸ் ஞானராஜ்,
   த/பெ. வரதராஜன்,
   67/3, விறகு பேட்டை தெரு,
   Crawford, திருச்சிராப்பள்ளி – 12.
2. ஆணையர்,
   திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
   திருச்சிராப்பள்ளி.
3. துணை ஆணையர்,
   திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
   திருச்சிராப்பள்ளி.
4. உதவி ஆணையர்,
   ஸ்ரீரங்கம் கோட்டம், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
   திருச்சிராப்பள்ளி.
5. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.
6. இணை இயக்குநர்
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்